# நவீன இலக்கியப் புனைவுகளில் ‘கூத்து’

பாஸ்கரன் சுமன்
கலை கலாசார பீடம்

தமிழ் இலக்கியப் பரப்பில் மன்னர்களும் பிரபுக்களும் இலக்கியத்தின் பெருவெளிக்குள் இருந்து புறந்தள்ளப்பட்டு சாதாரண மக்கள் உள்ளீர்க்கப்பட்டபோது அம்மக்களின் வாழ்வுமுறையும் மரபுகளும் கலை, அறிவியல் அம்சங்களும் இலக்கியத்தில் பெருமளவில் பிரதிபலிக்கத் தொடங்கின. இந்நிலையில் அத்தகைய படைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சாதாரண மக்களின் வாழ்வியல்முறைமைகளையும் மரபுகளையும் புரிந்துகொள்ளும் ஆய்வுமுயற்சிகளும் ஒருபுறம் மேற்கிளம்பின. அந்தவரிசையில் நகர்ப்புற நாகரிகத்துள் தம் பண்பாட்டைத் தொலைத்துவிடாத கிராம மக்களின் கலை வடிவமாகிய ‘கூத்து’ ஈழத்து இலக்கியத்தில் உள்ளீர்க்கப்பட்ட விதம் குறித்த ஒரு நோக்கு இங்கு முன்வைக்கப்படுகிறது.

அரங்குசார் நிகழ்த்துகலை வடிவமாகிய கூத்தில் கூத்துப் பிரதியாக்கம், கூத்தர் தெரிவு, கூத்துப் பழகுதல், ஒத்திகை, களரியமைத்தல்/அரங்கமைத்தல், ஆட்டம், பக்கவாத்திய இசை, இவற்றோடு பின்னிப்பிணைந்த மரபுகள் என்று நீண்ட பயணம் உண்டு. இந்நிகழ்கலைசார் மரபுகள், செயற்பாடுகள், ஒழுங்கமைப்புகள், நிகழ்த்துமுறை முதலானவற்றை நேர்த்தியான முறையில் இலக்கியப் பனுவலுக்குள் கொண்டு சேர்ப்பது அவ்வளவு எளிதானதல்ல. படைப்பாளிகள் தமது புனைவின் தருக்கத்திற்கு ஏற்பவே இக்கலைமரபை அல்லது அதன் கூறுகளை உள்வாங்கிக்கொண்டுள்ளனர். கூத்துக் கலையை உள்வாங்கிக்கொண்ட படைப்புக்களைப் பொதுநிலையில் நோக்குகின்றபோது, அக்கலை மரபை படைப்பின் வழி தரிசனப்படுத்துதல், அதனை அடியொற்றி ஒரு கதைச்சரடை/ சிக்கலை வளர்த்தெடுத்தல் ஆகியன படைப்பாளியின் நோக்கமாகவிருந்ததைப் புரிந்துகொள்ள முடிகிறது. எவ்வாறிருப்பினும் கூத்தை அதன் உள்ளார்ந்த தன்மையோடு வெளிப்படுத்துதல் படைப்பாளியின் கடன். கூத்து மரபைப் படைப்பின் வழி தரிசனப்படுத்த விழையும் படைப்பாளி, அக்கலையின் தத்துவார்த்த அம்சங்கள் குன்றாது பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

கூத்து மரபை படைப்புவெளிக்குள் உள்ளீர்த்துக்கொண்ட பல படைப்புகள் ஈழத்தில் வெளிவந்துள்ள நிலையில், மூன்று படைப்புக்களே இங்கு கவனத்திற்கொள்ளப்படுகின்றன. ‘கூத்து’, ‘வாசாப்பு’, ‘வேனாண்மை’ ஆகியவையே

அப்படைப்புக்கள். இவை முறையே சிறுகதை, நாவல், நவீன காவியம் (கவிதை) ஆகிய வடிவங்களில் கூத்தை உள்வாங்கியிருந்தன. இப்படைப்புக்கள் கூத்தைப் படைப்புவெளிக்குள் உள்ளீர்த்துக்கொண்ட விதம் குறித்து நோக்கு இனி நோக்கலாம்.

II

சிறுகதை வெளிக்குள் கூத்தைக் கொண்டுவர முயற்சித்தவர், நவம் (இயற்பெயர் ஆறுமுகம்). கிழக்கிலங்கையின் ஆரையம்பதி எனும் கிராமத்தைச் சேர்ந்த இவர், ஈழத்துச் சிறுகதை உலகில் பரவலாக அறியப்பட்டவர் அல்லர். இவரது பன்னிரண்டு கதைகள் அடங்கிய 'நந்தாவதி' தொகுதி (அக்கதைகள் 1960 - 1970 வரையான காலப்பகுதியில் எழுதப்பட்டவை) 1994 இல் வெளிவந்தது. அத்தொகுதியில் அடங்கும் 'கூத்து' (1964 இல் வீரகேசரியில் பிரசுரமானது) எனும் கதையே இங்கு கவனம்கொள்ளப்படுகிறது.

மென்மைத்தன்மை மிக்கவனாக, நுண்ணிய உணர்வின் அடிமையாக, நல்லுணர்ச்சியை வெளிக்காட்டக்கூடியவனாக விளங்கும் கலைஞன் சந்தர்ப்ப சூழலால் அத்தன்மைகளிலிருந்து விடுபட்டு குரூர உணர்ச்சிக்கு ஆட்படுகிறான். அவ்வுணர்ச்சி துன்பத்தையே விளைவிக்கிறது என்ற செய்தியை கிழக்கிலங்கையில் ஆடப்பட்ட 'சுபத்திரை கல்யாணம்' கூத்தைப் பகைப்புலமாகக் கொண்டு வெளிப்படுத்துகிறார். உழைப்பாளியும் கூத்துக் கலைஞனுமான சரவணமுத்துவும் நாகாத்தையும் மனமொத்த காதலர்கள். இந்நிலையில் நாகண்டாப்போடியும் நாகாத்தைமீது காதல் கொள்கிறான்; நாகாத்தையிடம் எல்லைமீறவும் முயற்சிக்கிறான். இக்கதையம்சங்கள் கதையின் முற்பகுதியில் இடம்பிடிக்கின்றன. கதையின் அடுத்த பகுதியின் நிகழ்களம் கூத்துக்களரியாகிறது. கோயில் முன்றலில் 'சுபத்திரை கல்யாணம்' கூத்து நிகழ்கிறது. சரவணமுத்து அருச்சுனனாகவும் நாகண்டாப்போடி வேடுவனாகவும் அதில் பங்குகொள்கின்றனர்.

''வட்டக்களரியில் கூத்து நிகழ்கிறது. அருச்சுனன் தவக்கோலத்தில் வீற்றிருக்கின்றான். பன்றியொன்று குறுக்கிட்டு அவன் தவத்தைக் கலைக்க எத்தனிக்கின்றது. தவக்கோலத்திலிருந்து கண்விழித்த அர்ஜூனன் தன் காண்டிபத்தில் கணையைப் பொருத்தி பன்றிமீது குறிவைக்கிறான். திடீரென்று அந்தக் கணத்தில் தோன்றிய வேடன் ஒருவனும் பன்றிக்குக் குறிவைத்து எய்கின்றான். இருவருடைய சரங்களும் ஏக காலத்தில் பன்றியின் உடலைத் துளைத்து அதன் உயிரை வாங்கிவிடுகின்றன. யாருடைய அம்பினால் பன்றி

இறந்தது என்பதில் வேடனுக்கும் விஜயனுக்கும் தர்க்கம் பிறக்கிறது. வாய்த்தர்க்கம் முற்றிக் கைகலப்பில் முடிகின்றது. இருவரும் ஒருவரை ஒருவர் மோதிக்கொள்கின்றனர். விஜயனின் பிடியிலிருந்து வேடன் தப்புவதும் அந்த வேடனுக்குத் தன் வில் முறியுமட்டுமாக விஜயன் அடிப்பதும் பின்னால் அவனது பக்தியையும் தீரத்தையும் வியந்து வேடனுருவில் வந்த சிவன் பாஸ்பதம் தருவதும் கதை. இங்கோ களரியில் கதை முற்றாக மாறுகிறது. வேடன் ஓடவுமில்லை. பாஸ்பதம் அருளவுமில்லை. சுருண்டு விழுந்தான். குருதி களரியில் பீறிட்டுப் பாய துடிதுடித்துப் புரண்டான். களரி இரத்தக் களரியாயிற்று'' என்று கூத்துக்களரியை நிகழ்களமாக்கிக் கொண்டு கலைஞனின் குரூர உணர்ச்சியின் விளைவைக் காட்டிவிடுகிறார், படைப்பாளி. சரவணமுத்து, நாகண்டாப்போடி, நாகாத்தை ஆகியோரின் வாழ்க்கை கூத்துக் காட்சிகள் போலத் திடீரென மாற்றமடைகின்றன.

குரூர உணர்வின் விளைவைக் காட்ட விழைந்த நவம், கிழக்கிலங்கையின் கூத்துமரபை புனைவுவெளிக்குள் கொண்டு வந்தார். அவ்வுள்ளீர்ப்பில் சுபத்திரை கல்யாணம் கூத்தின் கதைமரபை மாத்திரம் உள்வாங்கிக்கொள்ளவில்லை. கூத்தோடு தொடர்புபட்ட பல மரபுகளையும் கதையோட்டத்தோடு பதிவுசெய்திருக்கிறார். புராண,இதிகாச கதைகளே கூத்தாக ஆடப்படல், ஊர்மக்களே - உழைப்பாளிகளே - கலைஞர்களாக விளங்குதல், கோயில் வெளி கூத்துக்களரியாதல், கூத்துக்களரியைச் சுற்றி வாழைக்குற்றிகளில் முன்னைய காலங்களில் பந்தம் எரிப்பதும் தற்காலத்தில் (கதை எழுதப்பட்ட காலத்தில்) டியூப் பல்ப்புகள் பயன்படுத்துதலும், கூத்துக்களரியில் மதுபானத்தின் புழக்கம், பாத்திரங்கள் அறிமுகமாகும்போது நிகழும் மரபுகள் என்பன புனைவின் அழகியலை ஊறுபடுத்தாத வகையில் கதையில் பதிவாகியிருக்கின்றன. களரியில் பாத்திரங்கள் அறிமுகமாகும்போது நிகழும் மரபுகளைப் பின்வருமாறு காட்டுகிறார், கதாசிரியர் :

> ''கட்டியக்காரன் களரிக்குள் குதிக்கின்றான். வெள்ளைச் சால்வையைத் திரையாக விரித்துக் கட்டியக்காரனை மறைத்துப்பிடிக்கின்றனர் இருவர். பகல் வெற்றி கொளுத்தப்படுகின்றது. களரிக்கு வெளியில் சீன வெடி படபடவென்று முழங்குகின்றது. அண்ணாவியார் அற்புதமானதொரு தாளக்கட்டு வைக்கின்றார். மத்தளம் முழங்க சல்லாரி ஒலிக்க காலில் கட்டிய சலங்கை கலீர் கலீரென்று குலுங்கக்

கட்டியக்காரன் என்ற பபூன் கூத்தாடுகின்றான். அண்ணாவியார் ஆட்டுவிக்க அவன் ஆடுகின்ற ஆட்டம் களரியில் கலகலப்பை ஏற்படுத்துகிறது. தாளக்கட்டு அமர்க்களம் ஓய்கின்றது. மறைந்திருந்த சால்வைத்திரை அகற்றப்படுகின்றது. அவனுடைய உறவினர்களும் நண்பர்களும் களரிக்குள் புகுந்து கழுத்தில் கடதாசி மாலைகளையும் தோளில் சால்வைகளையும் பரிசாகப் போட்டு மகிழ்கின்றனர். சிலர் அவனுடைய இடுப்பிலும் சால்லையைக் கட்டிவிடுகின்றனர். கொஞ்சம் நெருங்கிய நண்பர்கள் பிளாக்ஸுக்குள்ளிருந்து கொஞ்சம் 'அம்பாரை'யை ஊற்றிக்கொடுத்து கூத்துக்கலைஞர்களை உஷார்படுத்தவும் தவறவில்லை''

நவம், தான் எடுத்துக்கொண்ட கதைக்கருவை கிழக்கிலங்கையில் ஆடப்பட்ட ஒரு கூத்தைப் பகைப்புலமாக்கிக் கூறியமையாலும் சிறுகதையை வடிவமாகக் தேர்ந்தமையாலும் புனைவின் அழகியலை ஊறுசெய்யாத வகையில் கூத்துமரபு குறித்த சில பதிவுகளைத் தந்திருக்கிறார்.

III

நாவலின் வெளிக்குள் கூத்தைக் கொண்டுவந்தவர் எஸ்.ஏ.உதயன். மன்னார் பிரதேசத்தின் இலக்கிய ஆளுமையாக உயர்ந்தோங்கி நிற்பவர். தமது நாவல்கள்வழி மன்னார் பிரதேச வாழ்வையும் மரபுகளையும் அவற்றின் உள்ளார்ந்த தன்மைகளோடு படைப்பு வெளிக்குள் கொண்டுவந்தவர். அவரின் 'வாசாப்பு' (2010) நாவல் இங்கு கவனத்திற்குரியதாகிறது. மன்னார் பிரதேசத்திற்குரிய வாசாப்பு எனும் நாடக மரபை நாவலின் கருவாகக் கொண்டமையால், வாசாப்பின் நிகழ்த்துமுறைகள், அவற்றோடு பின்னிணைப்பிணைந்த மரபுகள் என்பவற்றை புனைவு வெளிக்குள் உள்ளீர்த்துக்கொண்டுள்ளார். ''பாரம்பரிய கூத்துக்களையும் அதனோடு இணைந்த சம்பிரதாயங்களையும் உயிர்மூச்சாகக் பொத்திப் பொத்திப் பாதுகாத்தவர்கள்தான் இந்த நாவலின் கதாபாத்திரங்கள்... இலகுவும் அழகுச் செறிவுமுள்ள தெள்ளிய தமிழ்க்கூத்துக்கள் கொடிகட்டி வாழ்ந்த மன்னார் கிராமங்கள்தான் இந்த நாவலின் கதைக்களம். பறை, ஏடவிழ்ப்பு, வரவுகொடுப்பு, பழக்கம், கெச்சைக்கட்டு, கப்புக்கால் நாட்டு, படிப்பு, மங்களங்கட்டி நேத்தி அவிழ்ப்பு ஆகிய எட்டு சம்பிரதாய சடங்குகளுக்கூடாகவே இந்த வாசாப்புக் கதை சொல்லப்படுகிறது'' என்று உதயன் தனதுரையில் கூறுவது போலவே நாவலில்

அவ் எட்டு அம்சங்களையும் அதனுள் புதையுண்டு கிடங்கின்ற மரபுகளையும் அவற்றின் சமூகப் பெறுமானங்களையும் நுண்மையாக வெளிப்படுத்தியுள்ளார்.

“டும்…டும்…டும்… இத்தால் சகலரும் அறிய வேண்டியதென்னவெண்டால் கடவுளுக்கு தோத்திரமா நேத்தி நாடகம் படிக்க ஊர்ப் பெரிய சமூகம் உத்தேசித்திருக்கிறபடியால் இன்டைக்கு ராவு ஏழு மணிக்கு கோயிலில நடக்கிற கூட்டத்திற்கு சகலரும் அழைப்பு. டும்…டும்…டும்… இது கட்டளகாரர் ஆணைப்படி டும்…டும்…டும்…” என்று கோணான் பறையடித்து அறிவிப்பதில் தொடங்கும் நாவல்,

“இலங்கு பேர் சாலை நகரில் - செல்வம்
நேர் சீரோடு தானும் வாழ
வல்ல தேவன் ஆசிர் பெற்று எங்கும்
கங்கு கயல் கரை சேர

மங்களத் தருவப் படிச்சுக்கிண்டு கோயில் மருந்தத் தெளிச்சு ஏட்டில கட்டின தேத்திய அவுக்கிறாரு அண்ணாவியாரு” என்று நிறைவுகின்றது. இந்தத் தொடக்கத்திற்கும் முடிவிற்கும் இடையேதான் வாசாப்பு நிகழ்த்துமுறையின் அனைத்துச் சம்பிரதாயங்களும் மரபுகளும் அவற்றின் சமூகப் பெறுமானங்களும் விரிந்துகிடக்கின்றன.

நாவலானது ஒரு நிகழ்கலையை - அதன் மரபுகளை - சுற்றிச் சுழன்றபோது அதனைப் புனைவின் தருக்கத்துக்குள் உள்ளீர்க்கும் வகையில் கதைச்சிக்கலொன்றை உருவாக்கிக்கொள்கிறார். மூவிராசாக்கள் வாசாப்பில் ஏரோது வரவை முப்பதாண்டுகளுக்கு மேலாக ஆடிவரும் அமலதாசு, கலையே தன்னுயிரென நினைந்து வாழ்கிறார். அவரது வரவைத் தனக்குத் தரும்படி அவரது மருமகன் பறுனாந்து போர்க்குரல் எழுப்புகிறான். அண்ணாவியார் உள்ளிட்ட கூட்டத்தினரும் பறுனாந்துவுக்குக் கொடுக்கச் சம்மதித்துவிட்டனர். முப்பதாண்டுகள் கலையோடு ஒன்றி வாழ்ந்த கலைஞனின் மன அவசங்கள் நாவலில் விரிகின்றன. பறுணாந்துவின் உடலும் உள்ளமும் தளர்வுற்று எரோது வரைவை ஆட முடியாது போகிறது. கலைஞனான தன் மாமனின் உளத்தவிப்பே காரணமென உணர்கிறான். “ராசா வரவ அமலதாசு மாமாவே படிக்கட்டும்” என்று கூறி மன்றாடுகின்றான். “ஒரு முன்னோடிக் கலைஞனைக் கனம் பண்ணத் தெரியாத, கனம் பண்ண மனம் இல்லாத, தைரியம் இல்லாத இளைஞன் பறுனாந்துவின் ஆணவன்தான் நாவலில் தோற்றுப்போகிது” (தெளிவத்தை ஜோசப், வாசாப்பு நாவலுக்கான அணிந்துரை)

என்பதை காட்டும் வகையில் நாவலின் கதையை வளர்த்து வாசாப்பின் நிகழ்த்துமுறையையும் மரபுகளையும் அவற்றினூடு குவிமையப்படுத்தியுள்ளார். நவத்தின் கூத்து எனும் கதை, சிறுகதையை வடிவமாகக் கொண்டது. ஆதலால், புனைவின் அழகியல் கூத்துக் குறித்த விரிந்த தரிசனத்திற்கு இடமளித்திருக்கவில்லை. உதயனின் கதைக்கருவும் அவர் தேர்ந்தெடுத்தெடுத்துக்கொண்ட வடிவமும் வாசாப்பு நிகழ்த்துதலில் பல்பரிமாணத்தையும் புலப்படுத்தத் துணையாகியிருக்கிறது.

IV

ஈழத்து நவீன கவிதையில் பரிச்சயம் உடையவர்களால் நன்கு அறியப்பட்டவர் நீலாவணன். அவரது கவித்து ஆளுமையின் பிறிதொரு முகம் அவரெழுதிய பட்டமரம், வடமீன், வேளாண்மை ஆகிய நவீன காவியங்களில் வெளிப்படுகிறது. இம்மூன்று படைப்புக்களையும் ஒரு தொகுதியாக்கி 'நீலாவணன் காவியங்கள்' என அவரது மகன் வெளியிட்டார் (ஏலவே வ.அ.இராசரெத்தினம் வேளாண்மை காவியத்தைத் தனியாக அச்சுருவாக்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது). இக்காவியங்களுள் வேளாண்மை முற்றுப்பெறாத படைப்பு. முற்றுப்பெறாத அக்காவியத்தில் குடலை, கதிர் ஆகிய இரு படலங்களே (1965 க்கு முன்னர் எழுதப்பட்டவை) நீலாவணனால் படைக்கப்பட்டுள்ளன. ஏனைய படலங்கள் விரியுமுன் இறையடி நீழல் சேர்ந்தார்.

தமது கவிதைகள் பலவற்றில் கிராமியத்தை முன்னிறுத்திய நீலாவணன் (கிராமியத்தைக் கவிதைகளில் தத்ரூபமாக வெளிக்கொணர்ந்த சமகாலப் படைப்பாளிகளில் மஹாகவியே முதன்மையானவர்), உறவினர்களாகிய கந்தப்போடிக்கும் அழகிப்போடிக்கும் இடையிலான பிணக்கையும் அதன் காரணமாக கந்தப்போடியின் மகன் செல்லையனுக்கும் அழகிப்போடியின் மகள் அன்னமாவுக்கும் திருமணம் செய்துவைப்பதில் ஏற்படும் சிக்கல்களையும் கதைச்சரடாக்கிக் கொண்டு கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் வழக்காறுகள், மரபுகள், வாழ்வுமுறைமைகள் ஆகியவற்றைப் படிம்பிடித்துக் காட்டுகிறார். கமத்தொழிலோடு கூடிய மரபுகள், பூப்புச் சடங்கு, வசிய மந்திரம், உணவுப் பழக்கவழக்கங்கள், நிர்வாக மரபுகள், குடிமரபு, புழங்குபொருள்கள் எனக் கிழக்கிலங்கை தமிழ்ச் சமூகத்தின் வாழ்வுமுறையையும் மரபுகளையும் இயல்பு குன்றாமல் அவ்விரு படலங்கள் வாயிலாகக் காட்டும் நீலாவணன், கூத்துமரபு பற்றிய சித்திரத்தையும் தருகிறார்.

கோயில்வெளி கூத்துக்களரியாதல், களரியமைப்பு, கூத்தைக் காணக் கூடும் மக்கட் கூட்டம், கூத்துக் கலைஞர் மேடையில் தோன்றும்போது நிகழும் சம்பிரதாயங்கள் ஆகியன சித்திரிக்கப்பட்டுள்ளன.

பிள்ளையார் கோயில் கிழக்கு வீதியிலே
பெருமணல் செறிந்திடு வெளியில்

……………………………………

பன்னிரு கால்கள் நாட்டிய வட்டம்
பந்தலின் மீதுமேற் கட்டி
பன்னிரண் டிதழ்செம் பருத்தியின்பூ, நிலம்
பார்த்தது போறப்பல நிறத்தில்
தென்னையின் குருத்தில் கிளிகளும் விளங்கும்
தொங்கிடும் குஞ்சமும் கட்டி,
மண்குவிந் தமைந்த மேடையை அரங்கு
மண்டபம் ஆக்கினார் ஆங்கு.
பந்தலில் கால்களுக் கிடையிடை எண்ணெய்
பந்தக்கால் வரிசையாய் நட்டார்

எனக் களரியின் அமைப்பு கவிதைச் சித்திரமாகிறது. பன்னிரு கால் நாட்டிய வட்டக்களரி, தென்னையின் குருத்தால் நிகழ்ந்த சோடனைகள், மணல் பரப்பித் (குருத்து) தயாரான கூத்துமேடை, பார்வையாளர்களுக்குக் கூத்தர்கள் தெளிவாகத் தெரியும் வண்ணம் இட்டுவைத்த எண்ணெய் பந்தற்கால்கள் எனக் கூத்துமேடையை கவிதைவழி காட்சிப்படிமமாக்கியுள்ளார்.

கூத்துக்களரியில் பாத்திரங்கள் முதன்முறையாக அறிமுகமாகும் வேளையில் வெடிகொளுத்துதல், தாளக்கட்டு வைத்தல், வெள்ளைத்திரையால் மறைத்தல், உறவினர் முதலானோர் சால்வை அணிவித்தல் முதலானவை நிகழும். இந்தச் சம்பிரதாயங்களைக் கீழ்வருமாறு பதிவுசெய்கிறார்:

கட்டியக் காரன் கணபதிப்பிள்ளை
களரியில் தோன்றினான் வெள்ளை
கட்டியால் மறைத்தார், வெடியோடு குரவை
விண்ணெலாம் நடுங்கின! பாய்ந்து!
எட்டடித் தாளக் கட்டிலே ஆட்டம்
பட்டது களரியில் பாடாய்!

………………………………..

கணபதிப் பிள்ளை களரியில் வரவு
கட்டியம் சொல்லவும் தொடங்க
உனதென தென்று ஓடினார் உரிமை
உள்ளவர் அத்தனை பேரும்!
சனசமுத் திரத்தின் சந்தடி – குரவை
சடசட வெடிகளின் ஓசை
கணபதிப் பிள்ளை இடையிலே சால்வை
கட்டினார் மோதிரம் அணிந்தார்!

நீலாவணன் வேளாண்மை காவியத்தைப் படைக்க முற்பட்டதன் நோக்கம் கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வுமுறையையும் மரபுகளையும் இலக்கியப் பனுவலுக்குள் பதிவுசெய்வதே. ஆதலால், அம்மகளிடத்தில் வேரூன்றியிருந்த கூத்துக் கலை மரபும் அப்பனுவலின் ஒரு பகுதியாகியது; அச்சமூகத்தின் கலைமரபொன்றை அடையாளம் காட்டுவதே அப்படைப்பில் நிகழ்ந்தேறியிருக்கிறது. மாறாக, அக்கலை மரபின் நிகழ்த்துமுறைகள், அதனோடு கூடிய மரபுகள், சமூகப் பெறுமானம் என்பன நுண்ணிதின் புலப்படுத்தப்படவில்லை. காப்பியப் போக்குக்கும் அதன் அழகியலுக்கும் ஊறு விளைவிக்காத வகையில் கூத்தின் சில பரிமாணங்களைத் தந்திருக்கிறார்.